உ

கடவுள் துணை.

# சனிபகவான்

தோத்திரம்.

# நவக்கிரகதோத்திரம்.

இஃது

சண்முகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டது.

MADRAS:
PRINTED AT THE LYCEUM PRESS.
1861.

உ

சிவமயம்.

# சனிபகவான்தோத்திரம்.

காப்பு—வெண்பா,

தேவரொண்டிக்கதிபர் சித்தரொடு கிம்புருடர்*
மூவர்முனிவர்முதலோரா—மேவியுறந்.........*
தாரணிந்தமார்பன் சனிபகவான்சீர்புகலக்......*
காரணிந்த யானைமுகன் காப்பு. ...................*

ஆதிவேதாந்த முத லரியாஞான வைரந்தழுத் திணுட்பொருளையயன்மாறேடும்-சோதிசுந்ரம்ப லத்திலாடிநின்றசுடரொளியைத்தீபிடித்ததோஷத் தாலே-பாதிமதிசடைக்கணிய வரவம்பூணப்பதி யிழக்கச்சுடலை மிற்பாடியாடிச்-சாதியிலாவே டனெச்சிற்றில் சிலவைத்தாய்- சனியனேசாகமே றுந்தம்பிரானே, (க)

வேலவனைவேங்கைமரமாக்கிவைத்தாட்விரகுக ட்டுச்சொக்கர்தலைமெவிர்க்கவைத்தாய்-மாலினையே யுரலோடுகட்டுவித்தாய்- வள்ளிதனைக்குரவர் துவ னத்தில்வைத்தாய் - காலனைமாற்கண்ட னுக்காவர னுதைத்த்காரணமுநீபிடித்தகருமத்தாலே - சால வுனையான்றொழுதேனெனைத்தொடாதே- சனிய னேகாகமேறுந்தம்பிரானே. (உ)

மருவுத வயோத்தியில் வாழ் தசரதன்றன்மக்க
ளையும்வனவாச மாக்கிவித்தாய்- பஞ்சவர்கள்சூதி
னாற்பதியிழந் துபஞ்சுபடும்பாடவர்கள்படச்செ
ய்வித்தாய்-எஞ்சலிலாவரிச்சந்திரன்பெண்டைவி
ற்றேயிழிகுலத்திலடிமையுறவிசையவித்தாய் -த
ஞ்சமென்றேயுனையடுத்தேனெனைத்தொடாதேச
னியேனைகாகமேறுந்தம்பிரானே (௩)

அண்டமாயிரத்தெட்டுமரசுசெய்தவடல்சூரப
துமனையுமடக்கிவித்தாய்-மண்டலத்தையாண்
டநளசக்ரவர்த்திமனைவியொடுவனமதனிலலைய
ச்செய்தாய்-விண்டலத்தை பானுகோபன்றன்னு
லேவெந்தனலாகச்சுரணைவெருவச்செய்தாய்-தெ
ண்டனிட்டேனென்னுளு பெலைத்தொடாதேச
னியனேகாகமேறுந்தம்பிரானே. (௪)

அண்டர்கோன்மேனியிற் கண்ணாக்குவித்தாய்
யஞ்சிரத்தைவைரவனாலறுப்பிவித்தாய்-திண்டிர
ல்கொள்கோதமனாலகலிகைத்தான் சிலைபாகச்சா
முறவேசெய்வித்தாய்- தண்டரளநகையிரதிமார
ன்றனைச்சங்கரனார் நுதல்விழியிற்றணல் செய்
வித்தாய்-சண்டமிலாதுனைத்தொழுதேனெனைத்
தொடாதேசனியனேகாகமேறுந்தம்பிரானே (௫

பாருலவுபதியைப் பல்லுதிர்த்து வித்தாய்-ப
ஞ்சவர்க்குதூது பீதாம்பரனைவைத்தாய் - தாருல
வுவாலிசுக்கிரீவன் தம்மைத்தாரையினுற் றீராதசம
ர்செய்வித்தாய்-சூரனெனுமிலங்கையிராவணன்
றன்றங்கைசூர்ப்பநகிமூக்குமுலை துணிசெய் வித்
தாய்-தாரணியுமணிமார்பாவெனைத் தொடாதே
சனியனேகாகமேறுந்தம்பிரானே. (௬)

சுக்கிரன்றன் கண்ணிழந்தானிலங்கை யாண்டு
துலங்குமிராவணன்சிரங்கடிக்கவீழ்ந்தான்-மி
க்கபுகழிரணியன்றன்வீறழிந்தான்விளங்கு திரி
புராதிகளும்மெய்ந்துமாண்டார்-சக்கரத்தா லுடல
றுந்தான்சலந்தரன்றன்றாருகாசூரனுமே சமரி
ன்மாண்டான் தக்கன்மிகசிரமிழந்தான்றோஷித்
தாற்சனியனேகாகமேறுந்தம்பிரானே. (௭)

அந்தமுள்ளமங்கரன்கொம்பறவே செய்தாய
ருமுனிவர்மனைவிகள் கற்பழியச்செய்தாய்-சந்தி
ரன்றன்கலையழிந்து தழைக்கச்செய்தாய் சங்கர
னைப்பிச்சைதானெடுக்கச்செய்தாய்- தந்திமுகச்
சூரனுயிர்தளரச்செய்தாய்சாரங்கதரன்கரங்காற்
றறிக்கச்செய்தாய் - சந்ததமுமுனைப்பணிவே
னெனைத்தொடாதேசனியனே காகமேறுந் தம்பி
ரானே. (௮)

சீதைதனையிராவணனாற் சிறைசெய் வித்தாய்-தேவர்களை சூரனாற் சிறையிற்சேர்த்தாய் - மாது துரோபதை துயிலைவாங்குவித்தாய் - மகேச்சுரனையுமடைபிரியும்வகைசெய்வித்தாய் - போதிலயன் றலைகிள்ளப்பட்டிவித்தாய்-பொதியையினிலகத்தியனைப்பொருந்தச்செய்தாய்- தாதுசேர்மலர்மார்பா வெனைத்தொடாதே சனியனேகாகமேறு நம்பிரானே. (கூ)

அப்பர்தமைக்கருங்கல்லோடலையிற்சேர்த்தாயரனடியின்முயலகனையடங்கச்செய்தாய்-செப்புமார்க்கண்டர்தமைச்சிறையிலிட்டாய்-சீதரனைமச்சவுருவெடுக்கச்செய்தாய்- ஒப்பிலனுமான்வாலிலொளித்தீயிட்டா - யொலிகடலினஞ்சையரனுண்ணவைத்தாய்-தப்பிலாதுனைத்தொழுவே னெனைத்தொடாதேசனியனேகாகமேறுந்தம்பிரா(ம)

நீரினையுண்டெழுமேக வண்ணாபோற்றி நெடுந்தடத்திலறுகமலக்கண்ணாபோற்றி - சூரியன்றன்றவற்றில் வந்தபாலாபோற்றி- துலங்குநவக்கிரகத்துண்மேலாபோற்றி - காரியெனும்பெயர்கொளுடைகாராபோற்றி- காசினியிற்கீர்த்திபெற்றதீராபோற்றி-மூரிகொளுநாய்முகவாமூடவாபோற்றிமுது மாநின்முண்டகத்திரள்போற்றிபோற்றி.

சனிபகவான்தோத்திரம் - முற்றிற்று.

விநாயகர் துணை.

# நவக்ரகதோத்திரம்.

## காப்பு.

மண்ணுளுயிர்கட்கனைத்துமாறுதளித்துனல... ◦
நண்ணுநவக்கிரகநண்புசொலத்-தண்ணுலவு... *
திங்கலணிதங்குமுயர் செஞ்சடை யருண்மகிழ்
செய்,கங்கையருனங்கரனார்காப்பு, ... *

## (சூரியன்.)

காசினியிருளைநீக்குங் கதிரொளியாகியோ
ங்கும்-பூசனையுலகோர்போற்றப் புசிப்புடன்சு
கத்தைநல்கும்- வாசியேழுடையதேர்மேன்மகா
கிரிவலமாய்வந்த - தேசிகாவெனைரட்சிப்பாய்செ
ங்கதிரவனேபோற்றி, (௧)

## (சந்திரன்.)

அலைகடலதனிலின்றுமன்றுவந் துதித்தபோ
து - கலைவளர்திங்களாகிக்கடவுளொருமேத்து
ஞ்- சிலைநுதலுமையாள்பங்கன் செஞ்சடைப்பி
றைபாய்மேரு-மலைவளமாகவந்தமதியமேபோற்
றிபோற்றி. (௨)

## (செவ்வாய்.)

வசனநற்றைரியத்தோடு மன்னவர் சபையி
ல்வார்த்தை புசபலபராக்கிரமங்கள் போர்தனி
ல் வெற்றியாண்மை - நிசமுடனவரவர்க்கு நீ

ணிலந்தனிலளிக்குங் - குசனிலமகனுஞ்செவ்வாய்
குரைகழல்போற்றிபோற்றி. (௩)

(புதன்.)

மதனனூன்முதலநான்குமறைபுகல்கல்வி
ஞானம் - விதமுடனவரவர்க்கு விஞ்சைகளருள்
வோர்திங்கள்- சுதன்பசுபாரி சுகம்பலகொடுக்கவ
லவன் - புதன்கவிப் புலவன்சீர்மால் பொன்னடி
போற்றிபோற்றி. (௪)

(குரு.)

மறைமிகுகலைநூல்வல்லோன் வானவர்கரசு
மந்திரி - நறைசொரிகற்பகப் பொன்னாட்டினுக்க
திபனுகி-நிறைதனஞ்சிவிகைமன்னணினீடுபோகத்
லைதநல்கு-மிறையவன்குருவியாழமிருமலர்ப்பா
தம்போற்றி. (௫)

(சுக்கிரன்.)

மூர்க்கவான் சூரன்வாண முதலினோர்கு
ருவாம்வையங் - காக்கவான்மழைபெய்விக்குங்க
விமகனகமீவோன்- தீர்க்கவானவர்கள்போற்
றச் செத்தவர்தமையெழுப்பும்- பார்க்கவன்சுக்கி
ராசாரி பாதபங்கயமேபோற்றி. (௬)

(சனி.)

முதிவகடேவரோ மும்மூர்த்திகண் முதலி
னோர்கள்-மனிதர்கள்சகலவாழ்வுன் மகிமையதல்
லாதுண்டோ-கனிவுளதெய்வநீயே கதிசெயேகா

கமேறுஞ் - சனியனேயுனைத் துதிப்பேன் றமிய னேற்கருள்செய்வாயே. (எ)

( இராகு. )

வாகுசேர் நெடுமான்முன்னம் வானவர்க்க முதமீயப்-போகுமக்காலையன்றன் புணர்ப்பினு ற்சிரமேயற்றுப் - பாகுசேர்மொழியாள்பங்கன் பரன்கையில்மீண்டுபெற்ற- ராகுவேயுனைத்துதி ப்பேன் ரட்சிப்பாய் ரட்சிப்பாயே. (அ)

( கேது. )

பொன்னையின் னுரத்திற்கொண்டோன் புலவர்தம்பொருட்டாலாழி - தன்னையேகடைந்து முன்னந்தண்ணமுதளிக்கலுற்ற- பின்னைநின்கர வானுண்ட பெட்பினிற்சிரம்பெற்றுய்ந்தா -யெ ன்னையாள்கேதுவேயிவ் விருநிலம் போற்றத்தானே. (கூ)

( பொது. )

சூரியன் சோமன்செவ்வாய் சொற்புதன்வி யாழம்வெள்ளி-காரியுமிராகுகேதுக்கடவுளரொ ன்பானுமத்- தாரிலசக்கரத்தைத் தரித்திராப்பூசித் தாலும்-பாரிற்புத்திரருமட்ட பாக்கியநல்குந்தா னே. ... ... ... ... ... ... ...(ய)

நவக்கிரகதோத்திரம்.

முற்றிற்று.